# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2355 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

### *நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு*

*சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் 2023 (மட்டுப்படுத்தப்பட்ட)*

சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு காணப்படுகின்ற வெற்றிடத்துக்கு தகைமைவாய்ந்த ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்காக அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், நிதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2023.11.20 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமானதாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் இழப்புக்களை விண்ணப்பதாரிகள் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறை** -

அவி/ 16/ 0927/ 755/ 008 ஆம் இலக்க 2016.06.14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் வழங்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்துகொள்ளப்படும். நியமனம் அமுலுக்கு வரும் திகதி அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு /தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி விதித்துரைக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்குப் பங்களிப்புக்களைச் செலுத்த வேண்டும் ;

(ii) சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் I ஐச் சேர்ந்த செயலாளர் பதவிக்குரிய III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறாத அலுவலர் ஒருவர் எனின், பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு ஒரு வருட காலப்பகுதிக்குள் III ஆம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் விளைவாய்ந்தன்மை வாய்ந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய மொழித்தேர்ச்சி மட்டத்தை 05 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்துகொள்ளும் அலுவலர்கள் 03 வருடங்களுக்குள் ஒரு அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியையும், 05 வருடங்களுக்குள் மற்றைய மொழி பற்றிய தேர்ச்சியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும் ;

(iv) அமைச்சரவை தீர்மானங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படுகின்றது.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு, அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 எனும் சுற்றறிக்கைக்கு அமைய SL-1-2016, ரூபா 47,615.00-10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். தர முறையின் அடிப்படையிலான ஆரம்ப சம்பள நிலை ரூபா 76,175.00 சம்பள படிநிலை 20 ஆகும்.

04. **தகைமைகள்** :

04.01 *கல்வித் தகைமைகள்.-*

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ள சட்டத்துறை பற்றிய பட்டப் பின் படிப்பை பெற்றிருத்தல்.

04.02 *தொழில்சார் தகைமைகள்.-*

பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இற்கமைய, அரசின் அமைச்சு/ திணைக்களம் ஒன்றில் நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்ததொரு பதவியில் கடமையாற்றல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக இருத்தல்.

04.03 *அனுபவம்.-*

(அ) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இற்கமைய, நிறைவேற்று சேவை வகுதியில் முதலாம் தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவராக இருத்தல் அல்லது நிறைவேற்று சேவை வகுதியின் இரண்டாம் தரத்தில் 07 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய சம்பள ஏற்றங்கள் 07 ஐ உழைத்துக் கொண்டிருத்தல்.

(ஆ) அண்மித்த 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(இ) அண்மித்த 05 வருட காலப்பகுதியில் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்பட்டவராக இருத்தல் ஆகாது.

05. **வயதெல்லை**.- ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுவதனால் வயதெல்லை ஏற்புடையதன்று.

06. **உடல்சார் தகைமை**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை யாற்றுவதற்கும். பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியில் மேற்படி தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.-

அவி/16/0927/755/008 ஆம் இலக்க 2016.06.14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும். கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போதே தகைமைகள் பரிசோதிக்கப்படும்.

09. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கும் முறை -

| *புள்ளி வழங்க வேண்டிய துறைகள்* | *மொத்தப் புள்ளி* |
|---|---|
| மேலதிக கல்வித்தகைமைகள் | 45 |
| உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிகள் | 20 |
| விண்ணப்பதாரிகளினால் வெளியிடப்பட்டுள்ள சட்ட ஆய்வுகள் பற்றிய வெளியீடுகள் | 20 |
| மேலதிக அனுபவம் | 10 |
| நேர்முகப் பரீட்சைக் குழுவின் தற்றுணிபின் பேரில் தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைகளுக்கு | 05 |
| மொத்தம் | 100 |

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரி செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

10. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல வகையிலும் பூரணமான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமாகும்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளை மற்றும் விண்ணப்பதாரிகளினால் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிரதி சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. (i) விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இசைவானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 22-29 செ.மீ. அளவான A4 தாளில் தயார் செய்துகொள்ள வேண்டும். இலக்கம் 1-11 வரையான தலைப்புக்களை முதலாம் பக்கத்திலும், 12 முதல் இறுதி வரையான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும். அவற்றுக்கான தகவல்களை தமது கையெழுத்து மூலம் தெளிவாக நிரப்புதல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு உள்ளதா என்பதை, விண்ணப்பதாரி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும் என்றும்,

அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்றும் மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயார் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

**கவனிக்க** அ. விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு ஆவணமோ அல்லது பிரதியையோ இணைத்து அனுப்பக் கூடாது.

ஆ. கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆவணங்கள் அல்லது அவற்றின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ii) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் அலுவலர்கள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

12. அமைச்சரவையினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாகும் என்பதுடன், இந்த ஆட்சேர்ப்புக்கான அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ளதொரு விடயம் தொடர்பில் அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானம் இறுதி முடிவாகும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.**- தாங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு தகவல் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்புச் செய்து கொள்ள முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களின் விண்ணப்பதாரி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்கு முரணான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய,

செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு, மறுசீரமைப்பு
அமைச்சு.

2023.10.06.

| |
|---|
| இல. ........................................... |
| (அலுவலக உபயோகத்திற்காக) |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் - மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில்

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழில்): ........................................................................
.........................................................................................................
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ........................................................................
.........................................................................................................
(ஆ) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்) :........................................................................
.........................................................................................................
முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ........................................................................
.........................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழில்) :........................................................................
.........................................................................................................
03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................................................
.........................................................................................................
04. தொலைபேசி இலக்கம் : ........................................................................
05. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |
06. பால் : .......................
07. பிறந்த திகதி : ஆண்டு :.............................. மாதம் :.............................. திகதி :..............................
08. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் :.............................. மாதங்கள் :.............................. நாட்கள் :..............................
09. இனம் :..................................................
10. திருமணமானவரா/ திருமணமாகாதவரா? என்பது :........................................................
11. பட்டப் பின் படிப்பு பற்றிய விபரம் : .......................
பல்கலைக்கழகம் : .......................
பாடத்துறை : .......................
பட்டம் வழங்கப்பட்ட திகதி : .......................
மொழி மூலம் : .......................
12. சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி : .......................
13. சட்டத்தரணியாக பெற்றுள்ள அனுபவம் :................................................
14. தற்போது வகிக்கின்ற பதவி :...........................................
தரம் :.......................................
குறித்த தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :..................................................
தற்போதைய சேவை நிலையம் :................................................
15. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 04.02 பந்திக்கு அமைய தொழில்சார் தகைமைகள் :-
(i) ..........................................
(ii) ..........................................
(iii) ..........................................
(iv) ..........................................
(v) ..........................................

16. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 09 பந்திக்கு அமைய தொழில்சார் தகைமைகள் :-
(i) ..........................................
(ii) ..........................................
(iii) ..........................................
(iv) ..........................................
(v) ..........................................

17. மொழித்தேர்ச்சி (உரிய நிரலில் ✓ அடையாளமிடுக)

| | மிக்க நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

................................................ ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்று வழிமுறையாக வினைத்திறனின்மையின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி வெறிதாக்கிய ஒருவராகக் கருதப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை என்பது அல்லது தவறானது என்பது என்னைத் தெரிவு செய்துகொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது தொழிலில் இருந்து நீக்கம் செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ..........

.........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை (ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்)**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................ ...................என்பவர் இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. பதவியில் சேவையாற்றி வருகின்றார் என்றும், ஒரு தவறு தொடர்பில் எச்சரித்தல் தவிர எந்த வகையிலுமான ஒழுக்காற்று தண்டனைக்கும் அவர் உட்படுத்தப்படவில்லை என்றும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

.........................
அமைச்சுச் செயலாளரின்/
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

மற்றும் பதவி முத்திரை.
பெயர் :......................
பதவி :.....................
அமைச்சு/ திணைக்களம் :...................
திகதி :....................

10-302

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2023/ 2024

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

1. **பொதுவானவை.**- தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறியானது, இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :-

(அ) கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)
(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பமும்

(ஆ) ஏனைய கற்கைநெறிகள் (வகை II)
(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்
(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்
(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்
(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்
(v) தகவல் தொழில்நுட்பம்
(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்
(vii) பல்பகுதிய தொழில்நுட்பம்
(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்

2. **தகைமைகள் :**

2.1 **வயது மற்றும் தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரிகள், 31.12.2022 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்;

(ஆ) 31.12.2022 இல் 20 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்துறைக் கல்வியும் தொழில்நுட்பமும், கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 **கல்வித் தகைமைகள்.-**

(அ) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில், கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம்
(iv) உயர் கணிதம்

அத்துடன், இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2020 அல்லது 2021 அல்லது 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) "கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்" மற்றும் "கப்பற்துறை கல்வியும் தொழில்நுட்பமும்" (வகை I) கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை.-**

3.1 **கற்கைநெறிக்கான அனுமதி.-**

அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது இசற் - மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

3.2 **கற்கைத்துறை**

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

4.1 **விண்ணப்பப்படிவம் :**

(i) முதலில், விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

http://www.itum.mrt.ac.lk

(ii) பின்னர், ஒன்லைன் (online) மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சுயமாக பதிப்பிடக்கூடிய பிரதியை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்யப்படல் வேண்டும் (download the auto generated printable copy of the online application)

(iii) பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவமானது பதிப்பிடப்பட்டு (hard copy), விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் (விண்ணப்பப்படிவத்தின் 3 ஆம் மற்றும் 5 ஆம் கட்டங்களை பார்க்க).

(iv) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது (hard copy), கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2023/ 2024" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, **"உதவிப் பதிவாளர், கல்விசார் மற்றும் மாணவர் விவகாரப் பிரிவு, தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், தியகம, ஹோமாகம"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்தடன், விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது (hard copy) விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக உதவிப் பதிவாளர், கல்விசார் மற்றும் மாணவர் விவகாரப் பிரிவு, தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

(vi) தமது விண்ணப்பப்படிவத்துடன் (hard copy), ஒரு சுய முகவரியிடப்பட்ட ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"×4") கடித உறையையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு** : ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் ஆகிய இரண்டையும் விண்ணப்ப முடிவு திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்க. ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் இரண்டையும் சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட பரிசீலனைக்கு கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

4.2 **கற்கை நெறிக்கான முன்னுரிமை :**

(i) இரண்டு வகை கற்கைநெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் **கடல்சார் கற்கைநெறி (வகை I)** அல்லது **ஏனைய கற்கைநெறி (வகை II)** அல்லது **இரண்டு கற்கைநெறிகளுக்கும்** விண்ணப்பிக்கலாம். இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) கற்கைநெறிகள் வகை (I) கான முன்னுரிமை வரிசையை குறிப்பிடும் போது, முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. **கடல்சார் கற்கைநெறிகளுக்கு** விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) கற்கைநெறிகள் வகை (II) கான முன்னுரிமை வரிசையை குறிப்பிடும் போது, முதலாவது விருப்பு 1, இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்களது விருப்ப தெரிவு வரிசையை 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என வரிசைப்படுத்துதல் வேண்டும்.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்.-** ஏதாவதொரு கற்கைநெறிக்கு (வகை I அல்லது வகை II) விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபா) உம் இரண்டு கற்கைநெறிகளுக்கும் (வகை I மற்றும் வகை II) சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,200.00 (ஆயிரத்து இருநூறு ரூபா) உம் விண்ணப்ப கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் **தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளையில்** உள்ள கணக்கு இல. 83062337 க்கு வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) ஒன்லைன் (online) விண்ணப்பத்துடன் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(iii) **விண்ணப்ப முடிவுத் திகதி.-** விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 20.11.2023.

6. **தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை.-** ஒவ்வொரு மாவட்டத்திலும், அம் மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி தேர்ச்சி பரீட்சைக்கு தேவையான உசாத்துணை நூல்களை ITUM இணையத்தள முகவரியில் (http://www.itum.mrt.ac.lk) பெற்றுக் கொள்ளலாம்.

7. **பதிவு செய்தல்.-** இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பதிவு செய்யும் நாளில் சமர்ப்பித்தல் வேண்டும் :-

- க. பொ. த. (உ. த.) சான்றிதழ்
- க. பொ. த. (உ. த.) இசற் - மதிப்பீடு (Z - Score) சான்றிதழ்
- பாடசாலை விலகற் சான்றிதழ்
- பிறப்புச் சான்றிதழ்
- சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான அத்தாட்சிப்பத்திரம்

8. **முக்கிய குறிப்புகள்.-**

(i) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவு செய்த பரீட்சார்த்தி ஒருவர், அக்கற்கைநெறிக் காலப்பகுதியில், இந்நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ ஏதாவதொரு கற்கை நெறியை பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கும் தகுதியற்றவராவர்.

(ii) ஏற்கனவே இந் நிறுவகத்திலோ அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும் சரியானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என அறியப்பட்டால் அவ் விண்ணப்பதாரி இக் கற்கை நெறிக்கான கற்றல் நடவடிக்கைகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்.

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

10-279

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**மேல் நீதிமன்றம்-திருகோணமலை**

**நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்களை ஏல விற்பனை செய்தல்**

திருகோணமலை மேல் நீதிமன்றினால் விளக்கம் முடிவுறுத்தப்பட்ட, அரசுடமையாக்கப்பட்ட /உரிமை கோரப்படாத கீழே பட்டியலில் குறிப்பிடப்படுகின்ற மோட்டார் வான் எதிர்வரும் 2023.11.04 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

| வழக்கு இலக்கம் | வகை | பதிவு இலக்கம் |
|---|---|---|
| HCT/ 483/ 2012 | Toyota Town ace | 56-6280 |

01. மேல் நீதிமன்றின் பதிவாளரின் அனுமதிக்கமைய ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு 30 நிமிடத்திற்கு முன்னர் குறித்த மோட்டார் வானை பார்வையிடலாம்.

02. மோட்டார் வான் பதிவு செய்து பாவிக்க முடியும்.

03. நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில் குறித்த பொருளை ஏலவிற்பனையிலிருந்து அகற்றிக்கொள்ளும் பூரணமான அதிகாரம் நீதிமன்றிற்கு உண்டு.

04. ஏல விற்பனையில் வாங்கப்படும் பொருட்கள் அவ்விடத்தில் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்பட வேண்டும்.

05. ஏல விற்பனையில் கலந்து கொள்வோர் பொருட்கள் வாங்கும் போது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்கக்கூடிய அடையாள அட்டையினை முற்படுத்தல் வேண்டும்.

டீ.எஸ். சோசைதாஸ்,
மேல் நீதிமன்ற நீதிபதி.

கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்,
திருகோணமலை.

10-372

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.-

*கம்பனியின் முன்னாள் பெயர்:* சாட்வ ஹெல்த் கெயார் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் புதிய பெயர்:* சாத்வ ஹெல்த்கெயார் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம்:* PV 00281318
*பதிவு முகவரி :* இல. 5/3, ஸ்ரீ சீலாலங்கார மாவத்தை, முல்லேகம, ஹோமாகம
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2023.08.17

கம்பனி செயலாளர்கள்.

10- 263

---

**கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2023, செத்தெம்பர் 12 ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.-

*கம்பனியின் முந்தைய பெயர்:* மார்ல்போ புரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 13264
*பதிவு முகவரி :* இல. 24, அப்துல் கப்பூர் மாவத்தை, கொழும்பு 03
*கம்பனியின் புதிய பெயர்:* மார்ல்போ ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ்
செக்கரட்ரியல் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

03 ஆம் மாடி,
இல.11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

10- 272

---

**கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2023, செத்தெம்பர் 18 ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.-

*கம்பனியின் முந்தைய பெயர்:* அக்கவுண்டிங் சிஸ்டெம்ஸ் செக்ரட்டெரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 4190
*பதிவு முகவரி :* 3 ஆம் மாடி, இல.11, காசல் ஒழுங்கை, கொழும்பு-4
*கம்பனியின் புதிய பெயர்:* டெலொய்ட் கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

டெலொய்ட் கோர்பரேட்
சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

03 ஆம் மாடி,
இல.11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

10- 273

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(1) மற்றும் 11(5) ஆம் பிரிவுகளின் கீழ், 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதியின் விசேட தீர்மானத்தின் பிரகாரம் பின்வரும் கம்பனியின் பெயர் 2023.10.13 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர்:* தெரன இண்வேசம்மண்ட்ச் (பீவீடி)எல்டி
*பதிவிலக்கம்:* பீவீ 75640
*பதிவு முகவரி :* 119/ 4, ஆவாச ரோட், கெஸ்பேவ, பிலியந்தலை
*கம்பனியின் புதிய பெயர்:* தெரன இண்வேசம்மண்ட்ச் லிமிட்டெட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

டிஎசபீ மெனெஜ்மண்ட்
சர்விசஸ் (பீவீடி) எல்டி
கம்பனிச் செயலாளர்.

10- 284

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3) (ஆ) பிரிவுக்கு அமைவாக கம்பனிகளின் ஒன்றிணைப்பு அறிவித்தல்.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3) (ஆ) பிரிவுக்கு ஏற்பவும் மற்றும் அவற்றின் கீழும் கோர்டெலஸ்ட்ஸ் குலோதிங் வடவல (பிரைவேட்) லிமிடெட் (பீவி 12410) மற்றும் கோர்டெளல்ட்ஸ் குளோதிங் ராஜாங்கனய (பிரைவேட்) லிமிடெட் (பீவி 4133) ஆகிய நிறுவனங்களை கோர்டெளல்ட்ஸ் குலோதிங் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (பீவி 9271) என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதற்கு முன்மொழியப்பட்ட அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

ஒன்றிணைப்பின் பின்னர் ஒன்றிணைக்கப்படுகின்ற கம்பனி கோர்டெளல்ட்ஸ் குலோதிங் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (பீவி 9271) ஆக இருக்கும் என்பதோடு அதன் பின்னர், கோர்டெளல்ட்ஸ் குலோதிங் வடவல ( பிரைவேட்) லிமிடெட் மற்றும் கோர்டெளல்ட்ஸ் குளோதிங் ராஜாங்கனய (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் செயற்பாட்டிலிருந்து நிறுத்தப்படும். கோர்டெளல்ட்ஸ் குலோதிங் வடவல (பிரைவேட்) லிமிடெட் மற்றும் கோடெளல்ட்ஸ் குலோதிங் ராஜாங்கனய (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் 2023, ஒற்றோபர் 01 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் கோர்டெளல்ட்ஸ் குலோதிங் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு கையளிக்கப்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்டெளல்ட்ஸ் குலோதிங் லங்கா (பிரைவேட்) லிமிடெட்,
கோர்டெளல்ட்ஸ் குலோதிங் வடவல ( பிரைவேட்) லிமிடெட்,
கோடெளல்ட்ஸ் குலோதிங் ராஜாங்கனய (பிரைவேட்) லிமிடெட்.

10- 271

---

**எல்ஓஎல்சி சிலோன் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் நிலை மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவு நியதிகளின் பிரகாரம், கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட அதன் தொகுதிக்கடன்கள் 2023, ஒற்றோபர் 06 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைந்தமையினை அநுசரித்து "பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின்" இருந்து "வரையறுக்கப்பட்ட கம்பனி" ஆக மாற்றப்பட்டதன் விளைவாக கீழ்க் குறிப்பிடப்பட்ட கம்பனியின் பெயர் மாற்றம் பற்றி நாம் இத்தால் மூலம் அறிவிக்கின்றோம்.

*கம்பனியின் முன்னாள் பெயர்:* எல்ஓஎல்சி சிலோன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி
*பதிவிலக்கம்:* PQ 00234078
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர்:* எல்ஓஎல்சி சிலோன் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

சபையின்ஆணைப்படி,

எல்ஓஎல்சி கோர்ப்பரேட்
சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2023, ஒற்றோபர் 9.

10- 277

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டீ. வீ. பீ. சுதர்ஷன
கணக்கு இல.: 0074 5000 2571

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.06.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.08.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.08.02 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எட்டு இலட்சத்து பதின்மூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 10,813,757.94) 2023, யூன் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்து எட்டு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து எழுபத்துமூன்று ரூபா நாற்பத்தேழு சதம் (ரூபா 6,842,073.47) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) மேலும் இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஒன்பது ரூபா அறுபத்து இரண்டு சதம் (ரூபா 2,699,839.62) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 598, 836, 2187 மற்றும் 2630 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.11.30 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பிடு செய்யப்பட்ட அட்டவணை**

1. ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தள வெதிரட்ட (மாஹாவெதிரட்ட) கோரளே, சியபலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் சியபலாண்டுவ பிரதேச சபை எல்லைகளுக்குள் தொம்பகாஹாவெல கிராம அலுவலர் பிரிவின் தொம்பகாஹாவெல கிராமத்தில் அமைந்த "ஹௌலிகஸ்யாய எனும் ஹௌலிகஸ்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. W. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, சனவரி 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 453 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு கிழக்கில் அமைந்த 216 அடி நீள மற்றும் 155 அடி அகல பகுதி (00ஏ. 03றூ. 00பே.) காணியின் கிழக்கின் லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : மால ஆரவிற்கான ஒதுக்கம் ; கிழக்கு : H. G. உக்குபண்டா உரிமம் கோரும் FVP வரைபட இல. 602 இன் லொட் 43; தெற்கு : மொணராகலை - பொத்துவில் வீதியினூடான ஒதுக்கம் மற்றும் ; மேற்கு ; A. S. P. கருணாவதி உரிமம் கோரும் FVP வரைபட இல. 602 இன் லொட் 41, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர், ஒரு றூட் மற்றும் முப்பத்து இரண்டு பேர்ச் (01ஏ. 01றூ. 32பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 453 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 34/114 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய நிலஅளவீட்டிற்கமைவாக மேற் கூறப்பட்ட பகுதி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தள வெதிரட்ட (மாஹாவெதிரட்ட) கோரளே, சியபலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் சியபலாண்டுவ மாநகர சபை எல்லைகளுக்குள் தொம்பகாஹாவெல கிராம அலுவலர் பிரிவின் தொம்பகாஹாவெல கிராமத்தில் அமைந்த "ஹௌலிகஸ்யாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் B. G. C. புஷ்பகுமார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 4524 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் $1^{A}$ என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன, வடக்கு : மால ஆரவிற்கான ஒதுக்கம் ; கிழக்கு : FVP 602 இன் லொட் 43; தெற்கு : வீதி (H) ; மற்றும் மேற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் W. W. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.01.07 ஆந் திகதியிடப்பட்ட இல. 453 எனும் வரைபடத்தில் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் (00ஏ. 03றூ. 00பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4524 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 12/08 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 293/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எம். எம். எஸ். குமார மற்றும் ஆர். கே. டீ. ஐ. சாந்தனி
கணக்கு இல.: 0074 5000 6135

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.06.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.08.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.08.02 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எழுபது இலட்சத்து மூவாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 17,003,291.38) 2023, யூன் 06 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பதாயிரத்து முந்நூற்று பத்தொன்பது ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 4,150,319.81) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் ஒரு கோடியே ஒரு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூபா 10,177,264.92) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி

இலக்கங்கள் 611, 906 மற்றும் 2787 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.11.24 ஆந் திகதி பி.ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

ஊவா மாகாணம் மொணராகலை மாவட்டம் கந்துரட்ட கோரளே படல்கும்புர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவின் தெரப்பஹுவ கிராம அலுவலர் பிரிவின் தெரப்பஹுவ கிராமத்தில் அமைந்த "ஹெபயாய மற்றும் கல்மத்தெஹேன்யாய" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இறுதி கிராம வரைபட (F.V.P. No. 248) இல. 248 இல் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் இலக்கங்கள் 75, 77 மற்றும் 83 என குறிப்பிடப்பட்ட தொடர் காணித்துண்டுகளின் எல்லைகளாவன: வடக்கு: லொட் இலக்கங்கள் 65 மற்றும் 82; கிழக்கு: லொட் இலக்கங்கள் 79, 78 மற்றும் 128; தெற்கு: லொட் இலக்கங்கள் 72 மற்றும் 128 ; மற்றும் மேற்கு: லொட் இலக்கங்கள் 73 மற்றும் 74, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து ஒன்பது ஏக்கர் மூன்று றூட் மற்றும் ஒன்பது பேர்ச் (29ஏ. 03றூ. 09பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட F.V.P. No. 248 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 05/46 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் இலக்கங்கள் 75, 77 மற்றும் 83 எனும் தொடர் காணித்துண்டுகள் மீள் அளவீடு செய்யப்பட்டு மற்றும் ஒன்றிணைக்கப்பட்டு இல. MO 10164 எனும் வரைபடத்தில் லொட் 1 என குறிப்பிடப்பட்டு இது கீழே பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட தெரப்பஹுவ கிராமத்தில் அமைந்த "ஹெபயாய மற்றும் கல்மத்தெஹேன்யாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் B P இலங்கசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட இல. MO 10164 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: F.V.P. 248 இன் லொட் இலக்கங்கள் 65 மற்றும் 82; கிழக்கு: F.V.P. 248 இன் லொட் இலக்கங்கள் 79, 78 மற்றும் 128; தெற்கு: F.V.P. 248 இன் லொட் இலக்கங்கள் 72 மற்றும் 128 ; மற்றும் மேற்கு: F.V.P. 248 இன் லொட் இலக்கங்கள் 73 மற்றும் 74 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து ஒன்பது ஏக்கர் மூன்று றூட் மற்றும் ஒன்பது பேர்ச் (29ஏ. 03றூ. 09பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட MO 10164 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 26/24 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 293/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர். ஜீ. யூ. வீரசிங்ஹ
கணக்கு இல.: 1161 5204 6252.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.06.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.08.04 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.08.02 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே பதினொரு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்று எண்பத்தெட்டு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூபா 11,128,388.54) 2023, யூன் 06 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்று அறுபத்தாறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 257,566.56) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து வீதம் (10%) மேலும் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று இருபது ரூபா எழுபத்திரெண்டு சதம் (ரூபா 10,510,520.72) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு வீதம் (12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3117, 3440 மற்றும் 3823 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.11.24 ஆந் திகதி பி.ப. 4.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

1. ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், வேகம்பத்து கோரளே பிபிலே பிதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் பிபிலே கிராம அலுவலர் பிரிவின் பிபிலே கிராமத்தில் அமைந்த "பஹாலகெதர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. M. S. உணவட்டுன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, சனவரி 16 ஆந் திகதியிடப்பட்ட (2020.07.27 ஆந் திகதி எல்லைகள் உறுதி செய்யப்பட்ட) இல. 159 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன-வடக்கு : லொட் 6 ; கிழக்கு : மஹியங்கனை வீதி மற்றும் லொட் 21 ; தெற்கு : லொட் இலக்கங்கள் 21 மற்றும் 8 ; மற்றும் மேற்கு : லொட் 8 மற்றும் லொட் 6 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் மூன்று ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 7.35பே.) அல்லது 0.0186 Hectares விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 159 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 61/65 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. M. S. உணவட்டுன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, சனவரி 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 159 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இலக்கங்கள் 19, 20 மற்றும் 21 எனும் அனைத்து காணித்துண்டுகள் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 293/3

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

